**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 378/2013**

**வழக்கு சாட்சி – அ.சா. 4.**

**சாட்சி திருமதி. சந்திரகலா, த/பெ. சோலை சேர்வை**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.01.2026.

**(3 வது எதிரி ஆஜர். 1, 2, 4 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2, 4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

– – – – – –

**<u>அ.சா.4 மீண்டும் அழைக்கப்பட்டு, 1, 2, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–</u>**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் கூலி வேலை செய்கிறேன். நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் அன்னஞ்சியில் வசித்து வருகிறேன். நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1977 ல் பிறந்தேன். எனது தகப்பனார் சோலை சேர்வை எப்போது இறந்தார் என்றால் 1975 ல் இறந்தார். எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் போன்றவற்றை போலிசார் விசாரணையில் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. நானும், எனது தாயாரும் சேர்ந்து விற்ற சொத்தின் சர்வே எண். என்ன என்றால் சர்வே எண்.808, பட்டா எண்.502 ஆகும். மேற்படி சொத்து சம்மந்தமாக பெரியகுளம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS.No.236/1996 மற்றும் OS.No.302/1998 ஆகிய வழக்குகள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். மேற்படி இரண்டு வழக்குகளும், நாங்கள் நடத்தாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். மேற்படி இரண்டு வழக்குளில் சர்வே எண். 808 சம்மந்தமாகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண். 808 ற்கு அடங்கல் பட்டா எங்களது பெயரில் இல்லை என்றால் சரியல்ல. எனது பெயரில் இருந்தது. நான் அதனை பொன்ராஜ் மற்றும் ராமசாமி ஆகியோர்களுக்கு விற்பனை செய்துவிட்டேன். நாங்கள் சொத்தை விற்பனை செய்வதற்கு முன்பாக மேற்படி பட்டா எண். 502 சம்மந்தமாக பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடத்தில் விசாரணை நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். அதில் எங்களுக்கு சாதகமாக உத்தரவு பிறப்பித்தார்கள். எந்த வருடம்

எங்களுக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பித்தார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நாங்கள் பொன்ராஜ் மற்றும் ராமசாமிக்கு விற்ற சொத்தைப் பொறுத்து அவர்கள் மீது 1, 2 எதிரிகள் பெரியகுளம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS.No.288/2001 வழக்கு தாக்கல் செய்திருந்த விபரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். மேற்படி OS.No.288/2001 ல் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து பெரியகுளம் சார்பு நீதிமன்றத்தில் AS.No.43/2010 வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விபரம் எனக்குத் தெரியுமா என்றால், எனக்குத் தெரியும். மேற்படி வழக்கில் 1, 2 எதிரிகளுக்கு ஆதரவாக 15.10.2010 ல் தீர்ப்பு ஆகியுள்ள விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. எங்களுக்கு உரிமை இல்லாத சொத்தை நாங்கள் பொன்ராஜுக்கும், ராமசாமிக்கும் மோசடியாக விற்பனை செய்துள்ளோம் என்றால், சரியல்ல. அசா.1 யார் மீது புகார் கொடுத்தார் என்றால் மீராபாய் மற்றும் முருகேசன் ஆகியோர் மீது புகார் கொடுத்தார். எப்போது கொடுத்தார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. அசா1 கொடுத்த புகாரில் என்ன விபரம் உள்ளது என்று எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது. போலிசார் விசாரணையில் புகாரில் என்ன கூறியுள்ளது என்று எனக்குத் தெரியாது எனக் கூறினேனா என்றால் ஆமாம், ஆனால் நாங்கள் விற்பனை செய்த விபரம் பற்றி கூறினேன். போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் என்ன கூறினோம் என்றால் பொன்ராஜ் மற்றும் ராமசாமிக்கு விற்பனை செய்தது பற்றி கூறினோம். வேறு எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக வேறு எந்த விபரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.01.23 18:55:52 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**

**தேனி.**